[illegible]

ற்றுனே தோன்றவேண்டுவதின்றி யமையாமையின் அவைகளில் கிரகங்கள் ஒன்பதையும் சேர்த்து 12 ராசிகளுள் ஒன்பது கிரகங்கள் எவ்வளவு வேறுபாடு பெறுமோ அவ்வளவையும் எடுத்துச்சேர்த்து அவற்றுள் மனிதன்உண்டாகக்கூடாத (அதாவது மனிதர் கர்ப்பகோசம் மலரக்கூடாத கிரககிரணங்களமைந்த)சிலசூக்ஷ்மகால நிலைகளைஒதுக்கி மிருந்ததை ஓர்வழிச் சேர்த்து ஒவ்வோர் கிரகத்தை முன்னிலையாய்க்கொண்டே ஒவ்வொரு விஷயத்தைச் சொல்லும் புஸ்தகம் நாடீ புஸ்தகம் எனப்படும். அவற்றுள் சுக்கிரநாடீ முதலியவை முக்கியமானவை என்பார் சிலர். அவற்றுள் உலகத்தில் மனிதனெனப்பிறப்பவன் எவ்வித ஜாதகபாவங்களையும் எவ்வளவு சுகதுக்கங்களையும் பெறுவானோ அவ்வளவும் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆதல்கொண்டே இவ்வுண்மையை யறிந்தவர் ஆரியரோயாதலின் இச்சோதிடப்பெருநூல் இத்தேசத்தேயன்றி மற்றவர்க்கெவ்விதமும் சம்பந்தமற்றது.

வரும்.

ஓம்.

[illegible]

ப்ரம்மவித்தியா.

மாதம் இருமுறை

பிரசுரஞ் செய்யப்படும்.

புத்-5] சிதம்பரம்: 1890ளு நவம்பர் மீ 1உ [இ2



ப்ரம்மவித்தியா.

[illegible]

[illegible]

[illegible]

ஸம்ஸ்கிருதபாஷை.

ஜோதிஷம்.

தொடர்பு.

இச்சரீர வியந்திரம் எச்சமயம் வேலைக்குத்தொடங்குகின்றதோ அது முதல் ஒரு ஏற்பாட்டின்கீழ் நடந்துவருவதேயன்றி அமைப்பில்லாது வால்நக்ஷத்திர வழியாய்ப் போவதில்லை. ஆயின் அவைகள் பலவற்

[illegible]

[illegible]

[illegible]

யாற் செல்வதுண்டு. அவ்வளவு வழிகளும் அளவிடப்பட்டிருக்கின்றன. முதலில் சந்திரஹோரையில் ஒரு குழந்தை பிறந்தால் அக்காலம் கிரக கதிகள் இவ்விதமிருந்தால் அக்குழந்தை இவ்வளவுகாலம் இவ்வளவு நன்மையுடன் இருக்கும் என்பதாதி விஷயங்களே ஜாதகஸ்கந்தத்தில் உள்ளது. ஆயின் அது மெய்யென்பதை எவரும் மறுக்கக்கூடாதுபற்றி இவ்விஷயம் சூக்குமவறிவுள்ளவரால் அறியற்பாலனவான வழியென்றறிக. இனி இவ்விதம் பற்பல வுண்மைகளையும் நிறைத்துள்ள இந்த அரியநூலின் பெருமையை அறிவது மிகக்கடினமாதலாலும் அதின் சூக்குமங்களை யாராய்வதுஆதிகாலத்தவரான நம்மவர்க்கவசியமாதலாலும், அவரே அதை எழுதிமுடித்தனர். அவ்விஷயங்களில் ஸ்ரீஜைமினி முதலிய கிரந்தகர்த்தர்கள் பல விசேஷங்களை எழுதினர். இச்சோதிடத்திற்குனேமனிதன் உருவத்தைப்பார்த்து அவன் ஸ்திதிகளைச்சொல்லும் வழியான "சாமுத்திரிகா" சாஸ்திரமும் "கண்ட மனிதன் கொண்டவபிப்பிராயத்தை வெளியிடும் "பக்ஷினிப்ரச்சம்" முதலிய சாஸ்திரங்களும் ஒரு காலத்தை அல்லது

[illegible]

ஒரு சொல்லைப்பற்றி எடுத்துக்கேட்பவன் நடைகளைச் சொல்லும் "லம்பாகம்" முதலிய சாஸ்திரமும் இனியுமனேக சாஸ்திரங்களுமடங்கியிருக்கின்றன. இவற்றுள் நாடிசாஸ்திரங்களுள் அகப்படாத ஜாதகம் இதுவரையில் எங்கும் இத்தேசத்திற் கண்டிலேம். ஆதலின் அவ்விஷயத்தில் அவர் கண்டெடுத்துப் பரிபூர்ணம் என்றே நம்பவேண்டியது. அவைகளைக் கண்டெடுக்கும் வழியாதெனில் ஒவ்வொரு நாடியின் முக்கிய கிரகமான சுக்கிரன்முதலியவை எவன்ஜாதகத்திலேனும் ஜன்மராசியிற்றுனே இருந்தால் அது முதற்படலத்திற்றுனே இருக்கும். அங்குள்ள மற்றைய ஜாதகங்களைத் தவிர்த்து இவன்ஜாதகத்தைக்கண்டெடுத்து அதிலுள்ள பயன்களைக் கவனித்தால் அஃதுண்மையென்பது கட்டாயம் விளங்கும். ஆயின் இச்சோதிடத்திற்றுனே சில மந்திரசாஸ்திரங்களின் சம்பந்தமும் சொல்லப்பட்டிருக்கின்றது. அவைகளைப்பற்றி மந்திரசாஸ்திரப்பெருமையை எடுத்தெழுதுமிடத்து விரிப்பாம்.

[illegible]

மறுமை.

தொடர்பு.

இனி மஹாதலம் என்னுமிடம் "ம" என்னும் எழுத்து விந்து என்னும் (ο) த்துக்குக் குறியாகச் சேர்க்கப்பட்டமையாலும் "ஹா" என்பது இரண்டைக் குறித்தலாலும் 'மஹாதலம்' இரண்டு சக்தியுள்ள தலமாய் முடிந்தது. இனிப் "பாதாளம்" என்பது ஒரு சக்தியுள்ள தலமே. 'ப' என்பது நெடுங்கால வழக்கால் நெடிலாயிற்றென்றறிக. ஆயின் யாம் வெகு கீழாய் விவகரிக்கும் இடமும், யாம் வெகு கிட்டியதாய் விவகரிக்குமிடமும் அமரிக்கர் தமக்குக் கிட்டியதாய் விவகரிக்கும் இடமும் வெகு தூரம்போல் சொல்லால் தோன்றினும் அங்கு அது ஓர் சக்கிரத்தில் அடங்கிநிற்றல் வேண்டுமாகலின் அவ்விரண்டும் ஒருமாதிரியுள்ளதாய் "அதல, பாதால" சொற்களால் சொல்லப்பட்டன. ஆயின் அமரிக்கர் நோக்க பாதாளம், எமது நோக்கத்துக்கு அதலமாம். இதற்கெதிர்மறையே எம் நோக்கத்திற்குப் பாதாலம் அமரிக்கர்க்கு அதலம் யாங்ஆங்கிலேயர்க்கதலம் ரோமகர்க்குப் பாதாலம்.

[illegible]

உதாரணம்:—ஒரு விளாங்கனியின் மேற்புறத்தில் உயர, எறும்பும் நேர் கீழே ஓரெறும்பும் நிற்க' மேல் எறும்பு கீழ் எறும்பு இவைகள் ஒன்றையொன்று தூரத்துள்ளதாகக் காணினும ஓர் விருத்தத்தில் அவை இருப்பதுண்மையன்றோ? அங்ஙனம் விதலமும் மகாதலமும் இரண்டாவது சக்கிரத்திலுள்ளது. ஸுதலதலாதலங்கள் மூன்றாவது வரிசையை அடைந்து நின்றனவாயின் இம்மூன்றும் ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்டு வேறு பொருளாகக் காணுது ஒன்றாகவே நிற்கும் நடுவில் உள்ளது. ரஸாலம் 'ர'இங்கு என்னுமெழுத்து சம்பவித்திருத்தலால் அப்பதம்பொருளில் "தீ" அதிகமாகவிருக்கவேண்டும். அது பூமண்டத்தின் நடுவிலுள்ள ஓர் வகை 'தீ' என இதனுல் குறிக்கப்பட்டதறிக. அதே சமுத்திரங்களைக் கொதிக்கச்செய்யும். "பாடபாக்கினி" என்பார்கள். இங்கு சமயம் நேர்ந்தமையால் இங்கு சிறிது "பாடபம்" என்னும் தீயைப்பற்றி எடுத்துரைப்பாம். கவனியுங்கள். "பாடபன் என்னும் சொல்லுக்கு "குதிரை முகத்தில் பிறந்த தென்பது செம் பொருள்

[illegible]

இங்கு குதிரை" என்பது "படபர, என்று வடநூல் வழக்க மாதலின் "படபா" குதிரை- அதிற்பிறந்தவன் "பாடபன்" என்றாயிற்று- இங்கு "படபா,, என்று சூரியனைக்கூறுவது. சூரியன் அதிக வேகத் துடன் கீழ் மேலாய் ஓடுவதுபோலக் கண்டாலும், வேதங்களில் "வேகமாப்ச் செல்வது அசுவம்" என்று அசுவத்தின் பொருளுரைத்தலாலும் (ஆசு - வ, அசுவ) என்க. ஆதலாற்றான் பாகவதமுதலிய புத்தகங்களிற் சூரியன் அசுவனாய் இருந்து யாஞ்ஞவல்கியர்க் குபதேசித்ததாகச் சொல்லப்படுகிறது. அச்சூரியனது குமாரர்க்கோ அச்சுவினிகள் என்னும் பெயருண்டு. அவனிடமிருந்து வெளியான தேயுவே சிறிது காலஞ் செல்ல மேற்புறங் கறுத்து உறைந்து கடினமாய்ப் பாகப்பட்டு திட்டமாய் அதன் மேல் ஆவியால் தண்ணீர் உண்டாக அதினின்று பூமியுண்டானதே சிருட்டிக்கிரமம். ஆதலின் இங்குள்ள உள்ளொளியே யாமெல்லோரும் உயிர்க்கக் காரணம். ஆயின் அச்சொல்லை ஒருவாறு மறுபடி உண்ணோக்காக நோக்கில் அங்கு ஓர் உண்மை வெளியாகின்றது. அதாவது (ப்³ா, ப்³, ப்³) 'பா' என்பது மூன்று. 'ட' என்பது மூ

[illegible]

ன்று. மற்றப் 'பா' வும் மூன்று ஆயின் இது மேலுங்கீழும் மூன்றாவது தத்துவமாய் ஒளியை யமையப்பெற்ற நடுத்தீயைக் குறிக்கின்றது. முன் யாம் எடுத்துரைத்தபடி ஸுதல ரஸாதல தலாதலங்கள் மூன்றும் மூன்று சக்தியுள்ள தலங்கள். ஆதலின் இங்கும் மூன்றெழுத்துக்கள் மூன்றெனக் கணக்கையே குறிக்கின்றன. இனி மேலே விதலமகாதலங்களில் 'வ' என்னும் வருணபீஜமும் (தண்ணீரைக் குறிக்கும சொல்லும்) 'ம' என்று காற்றைக்குறிக்கும் எழுத்து மமைந்தமையால் அங்கு சமுத்திர ஸ்தானமேற்பட அதற்குள் பாடபம் அடங்கியது காண்க. இங்கு 'வ' 'ம' என்னும் எழுத்துயாம் குறித்த பொருளைக் குறிப்பனவென்று 'ஹயவரட்' 'லண்' 'ஞமஙணநம்' என்னுஞ் சூத்திரங்களுக்கு உரைசெய்யுமிடத்து நந்திதேவர் விளக்கினார். இனி அதல என்னுஞ் சொல்லில் 'அ' என்பது ஆமை, இடம் இவ்விருபொருளைக்கொடுக்குமியல்பினதாதலால் ஆமைகள் வசிக்கக்கூடிய சேற்றுநிலங்களைக் குறித்தது. இங்கு கூறிய வகாரப்பொருளை நானார்த்தரத்தினமாலை யென்னும் வடநூல் நிகண்டுவிற் காண்க. ஆயின் முன்

[illegible]

னோர் கொள்கையின்படி பூமியின் இயல் இவ்விதமாகின்றது. சூரியனிடம வெளிவந்த வெட்பம் காலங்கடந்து பரிபாகத்தால் ஐந்துவித வேறுபாடுபெற்ற ஆவரணங்களுடன்கூடிப் பூமி எனப்படும். அதனுள் முதலாவரணம். பண்முதலியவை. இரண்டாவது சேற்றுருவம். மூன்றுவது காற்றும தண்ணீரும். நான்காவது தேயுவும பூமியுஞ் சேர்ந்தது. ஐந்தாவது தேயுவே. ஆயின் இக்காலத்தவர் சோதித்து "மேற்புறம் மண் லோகம் முதலியவை உள்ளனவென்றும் அதன் கீழ் மண்ணும நீரும கலந்திருப்பதாயும், பிறகு தண்ணீர் மட்டில் எனவும், அதன் கீழ் கிட்டம. (லோகமும் தேயுவும் சேர்ந்தது.) அதன்கீழ் தேயு வென்றும் கண்டதும் உண்மையாய்த்தான் இருக்கலாம். ஆயின் மூன்றுவது தனித்த தண்ணீரென்பது இவர் கொள்கை. நம்மனோர் கொள்கையோ அது காற்றுங்கலந்தது என்பது. இவ்வளவே வேறறுமை. இனி 'அஸிபத்திரம் முதலிய நரகரூபங்களுட்இவ்வித உண்மைப்பொருள் உள்ள விஷயத்தை ஊகித்துப்வீர்களாக. இவ்விதம் ஏதோ காருடம் முதலிய புராணங்களைக்கண்டு சிலவுண்மைகளை வெளியிட்டோ

[illegible]

ம். இனி எழுதிற் பெருகும். ஆதலாற்றுன் பிரமதேவனும் உலகசிருட்டி காலத்தில் வேதத்திற்கண்ட சப்தங்களை மனதில் இருத்தி அதன் உட்பொருட்கியைய உலகத்தைச் சிருட்டித்ததாக வேதங்களும் மற்றவிடத்தும் சொல்லப்படும் வகையறிக. இம்மட்டில் ஏதோ சிறிது நரகவிஷயத்தில் எழுதினோம். ஆகையால் இந்நரக நிலையைச் சொல்லக்கொண்டும் அறியும்வழி காட்டப்பட்டது. இனிச் சுவர்க்கத்தைக் குறித்தெழுதுவாம். இப்பொழுது எழுதிய நரகத்திற் கெதிர்மறையாய்ச் சுவர்க்கங்களுள்ளும் எழுவகைத்தோற்றங்களும சொற்களுமுள. அவை பூ:, புவ:, ஸுவ:, மஹ:, ஜன:, தப:, ஸத்தியம என்பன. இதில் சரீரத்தில் இவற்றின் நிலையைச் சொல்வாம். உற்பத்தியாகும் ஒவ்வொருபொருளுக்கும் ஏழு நிலைமைகள் உண்டு. அவைகளுள் பூ என்பதுஉண்மை (இருப்பு) 'புவ' என்பது பருத்தல் 'ஸுவ' கருப்பை வெளிப்படுதல். 'மக' மண்ணை விட்டெழுதல். ஜன என்பது மற்றுக் காணக்கூடிய நிலை. 'தப' என்பது சூரியன் கிரணங்களால் உண்டாகும் பரிபாகம். ஸத்தியம் என்பது பூரணப்பொருட் டன்மை உதாரணமாக ஓர் முளையை எடுப்போம். அதற்கு விதையாயிருத்தல், மண் தண் முதலியதுகளை ஏற்றன் மேல் மற வொழிதல், பூமியை விட்டெழல், மற்றவற்குப்புலப்படல் சூரிய கிரணங்களால பாகமடைதல், மற்றொரு பொருளாய் நி

[illegible] ற்றல் ஆக ஏழு நிலையுள்ளன. இங்ங

[illegible]

னமே மனிதரிடமும் உண்டாக்கவேண்டும். இங்கும்முற்கூறியதுபோலவேஇன்பத்தின் வேற்றுமைகளைப்பற்றிப் பின்னெழுதுவாம்.

விஞ்ஞானசிந்தாமணி.

ஐயா !

வடமொழியின் பெருமையைக் கண்டுகளிக்கும் நண்பர்காள்! உங்களுக்கு இப்பொழுதுண்டாயமறைந்து வெளிவருத விஞ்ஞானசிந்தாமணியைப்பற்றி எழுதாதிருப்பது உசிதமாகாது. ஆதலின் அதைப்பற்றிச்சிறிது எழுதுவாம். அதற்குமுன்னுற் பிறப்பு என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா! இது துவக்கத்தில் மலையாளநாட்டில் அவ்வெழுத்திற்றுனே தோன்றி மறைந்து போய் மற்றொருமுறை மலையாளமும ஸம்ஸ்கிருதமும சேர்ந்து வெளியாகி சுமார் இரண்டுவருடங்களாக நடந்தும், பிறகு தனியே வெளிவந்தும், மீண்டும்எக்காரணத் தாலோவெளிவரக்கூச்சமுற்றது. இப்பொழுதுமுன் பத்திராதிபரான "நீலகண்டபுன்னசரி நம்பி அவர்களை ஆதாவாக் கொண்டுவெளி வந்தது. ஆயின் இப்பத்திரிகை இனி தளராமுயற்சி பெறும் பொருட்டு யாமும் இறகேக்கச்சப்ப வித்தது.

[illegible] Hebru Latin [illegible]

அஃதெங்ஙனமெனின், உலகத்தில் விசேஷ வழக்கமில்லாமல்குறைந்திருக்கும் பாஷையை முன்னுக்குக்கொண்டுவரமுயலும்யாவரும், துவக்கத்தில் அப்பாஷை வொழிந்த காரணத்தையும், அக்காரணத்தை பகற்ற வேண்டிய வழிகளைப்பற்றியும சாங்கோபாங்கமாக வெடுத்துரைத்து பிறகு அதன மேன்மையைச் சொல்வமேத நன்கு. மற்றுமுள்ள விடங்களில் இவ்விதம் ஒடுங்கின பாஷைகள் பலவுள கேனும் அப்பாஷை இதரபாஷைகளைபபோல் அதிக வழக்கம்பெறுது, எக்காரணங்கொண்டு எல்லோரும அதில ஓர் கௌரவம் பாராட்டி வருகிறுர்களென்பதைப் பற்றிப்பரியாலோசிக்க வேண்டியது அவசியம். சிறிது கவனியுங்கள்! மேற்றிசையில் ஹீப்ரு, லத்தீன் பாஷைக்ள் இக்காலம் தேசபாஷைகளாகா தொழிந்தன. ஆயினும மேற்றிசையார் அவைகளைக் கைவிடாது காத்து வருகிறுர்கள். எற்றிற்கு? சொற்சுவையைப்பற்றி மாத்திரமலல; மற்று ஹீப்ரு பாஷையில் சிறிதுபாகம் அவர்களுக்கு வேண்டிய மைபிலுக்கு உபகாரமாகும் பொருட்டென்க. அன்றியும் முதல் மொழிபெயர்ப்பு லத்தீன் பாடையில் செய்யப்பட்டதாம். அங்ஙனமே வ

[illegible]

டமொழி இத்தேச வழக்கத்திலி ல்லாமற் போயினும், இப்பாஷையி ன் மாண்பு ஆரியர் குலத்திற்கு வேண்டிய எவ்வித சடங்கும் இப் பாஷை சம்பந்தமாகவே இருத்தலா ல், இச்சடங்கு கட்கும், இப்பாஷை க்கும், இப்பாஷைக்காரர் களுக்கும் உள்ள சம்பந்தம் எக்காலும் விட் டொழிவதில்லை. இத்தேசத்தில் எ வ்விதக்கிரியையும் செய்ய ஏற்பட் டவொருவன் வடமொழியில் சிறி து கற்கவேண்டியது அத்தியாவசி கம். அங்ஙனமில்லாது சிலர் பிழை ப்புக்கெனவே வேதங்களை யோதிவ ருகிறார்களேயன்றி மற்று இதன்பெ ருமையை அறிய வேண்டியல்ல. அன் றியும் இதனால் கிடைடக்கும் பயன் வேறுபாஷைகளிலும் கிடை க்குமென்றே கருதுகிறார்கள். இ ங்ஙனங்கருதுபவர்கள் நம் தமிழரே. இவர்களுள் ஈழநாட்டார் வடமொ ழியொன்றே நன்மொழியென்றற ிந்தும் அதை விசேஷமாகப் பயி ன்று வருகிறார்களில்லை. ஆத ல் பற்றி இவ்வரிய பாஷை இதரபா ஷையைப் போல் தேச பாஷையா குமென்று எமது புத்திக்கெட்ட வில்லை. இப்பாஷை மறுமைக்குச் சாதகமாயின் அப்பொழுது தான் சிலர் கற்பார்கள். முழு முதலாய முக்கட் பிரானது திருவருள் நிறை

[illegible]

ந்ததும் இலக்கணம மைந்து மிரா னின்ற இப்பாஷை இயற்கையிரு னே உலகத்த வர்களுக்கு மறுமை ப்பயன்களை இயக்கு மாதலாலும், வேதங்கள் முதலிய பல ஞான நூ ல்கள் அடங்கி யிருத்தலாலும், இத் தேசத் தவர் அப்பாஷையைக்கை க்கொண்டார், என்பது சத்தியம். ஆதலின் இவ்விஷயத்தின் கருத்து யாதெனில், எவன் இப்பாஷையை விருத்தி செய்விக்க முயல்வானோ அவன் அப்பாஷையிலுள்ள நல்லு ண்மைகளை விளக்கி, அதனை நோ க்கிவருபவர்க்கு அப்பாஷையின் எ ளிய பெருமைகளையும், அழகை யும் உபதேசிக்கக் கடமைப் பட்ட வன். இதனால் "விஞ்ஞான சிந் தாமணிககு "யாம் யாதுங் குறை கூற வந்தோ மில்லை. இது இரு மைகளும் சாதகமாயின்; நமது ப் ரம்மவிததியா விற்குமிகச் சாதக மாமென்பதே எமது கருத்து. உல கத்தில் புழுக்கள்முதல் மக்களீறாக வுள்ள எவரும் பெண்களை மணப்ப து இயற்கையாலன்றிச் சுவையால ல்ல. ஆதலால் யாம் எடுத்துக்கா ட்டிய வழியில் இப்பத்திராதிபர் நிற பரோல், இனி நாத்திகர், கிறிஸ்தவ ர், ஏனைய சீர்திருத்தஞ்செய்ய வரு பவர்கள் யாவரும் ஓர்புறமொதுங் கிநிற்கத் தடையிலது. விஞ்ஞா

[illegible]

னசிந்தாமணிக்கு நேர்ந்த பாலாரிஷ்டங்களை யகற்றிச் சாந்தி முதலியவைகளை நடாத்தி இதற்குக்கங்கணம்பூண்ட "நீலகண்ட" னென்னும் புலவன் இப்பத்திர ரத்தினத்தை விடாமுயற்சியோடு பன்னுடும் நன்னுடாகப்புகழ நல்வழி நடாத்துவானென்று நம்புகிறோம்.

இனி இப்புலவன் நன்மையை ஈண்டெடுத்து விளக்குவாம்.

மறுமை

* சொன்மாத்திரையிலும் அதைத் துணிந்துரைக்கக்கூடும். எங்ஙனமெனில் யாம் முன்னரே சுவர்க்கங்கள் (224) வேற்றுமை பெற்றனவெனவும், நரகங்கள் (21) வேற்றுமையுள்ளனவென்றும் குறித்தோமல்லவா? இவ்விஷயத்திற் சுவர்க்கம (மேலுலகங்கள்) நரகம் (கீழுலகங்கள்) இவற்றின் பெயரை நன்கு சாங்கிய சாஸ்திரக் கருவியால் ஆராய்பவன் இதனுண்மையை அறிந்திடுவான்.

எங்ஙனமெனில் ஆரியர் கீழுலகங்கள் ஏழு என்றும், மேல் ஏழு

* இச்சஞ்சிகை 28-ம்பக்கம் "மறுமை தொடர்பு" என் மகுடத்தின்கீழ் "இனி மகாதல ற என்னும் விஷத்திற்கு முந்தி ம்" விஷயத்தைச் சேர்த்துக்கொள்ளவும்.

[illegible]

என்றும் வழங்குவார்கள் அவைகளுள் மேலுலகங்களில் உள்வேற்றுமை ஒவ்வொன்றிற்கும் (32) முப்பதுமிரண்டுமோம் ஆயின் அவை (32×7 224) ஆயிற்றும். கீழுலகங்களுக்கு வகையில் (3) வேற்றுமைகளாதலின் அவை 3×7 21 இருபதும் ஒன்றுமாயினவாம். இங்குட்கருத்திது. பற்பல வண்டங்கள் சூரியன் முதலிய ஏதையேனும் நடுநாயகமாக்கி அதைச் சூழ்ன்றவர அதன் பக்கங்களில் மேலுங் கீழுங் கிட்டியும் சிறிதுதூரத்திலும் வெகுதூரத்திலும் அதிக சூரியகிரணங்களைப்பெற்றும் பெறாதுமாய் நிற்றலால் அவற்றுள் இனபங்களும் தாரதம்மியமாய்த்தானே இருக்குமாதலின் அவைகளுள் பல வேற்றுமைகள் தோன்றுவதாய் நம்மவர்கள் கொண்டார்கள். இனி மற்றைய வண்டங்களைப்பற்றுதுதானே ஒளியின்றிடமாய் இருக்குஞ் சுதந்திரவண்டங்கள் அனேக மிருக்கின்றனவெனில், அவைகளும் மற்றொன்றைநோக்கிச் சுழல்வனவேயன்றித் தனித்தவையல்ல. இவ்வுண்மை புத்திமான்களது நுட்பவறிவிற்கெட்டக்கூடியதேயன்றி அவர் கண்ணுக்கும் கருவிக்கும் எட்டாது எம்மவர் காணக்கூடியவைகளுள்

[illegible]

சூரியபிம்பம் முதல் அதன் பக்கத்துள்ள சிலவண்டங்களே சுவர்க்கமெனப்படுகின்றன. நரகங்களுள் துன்பத்தின் தீவிரம், தீவிரதரம்; தீவிரதமம் என்னும் வேற்றுமையைப்பற்றி மூன்றுவித வேறுபாடுகளையும், சுவர்க்கலோகத்தின் இன்பவிசேடங்களையும், நரகலோகத்தின் பெயர்களைக்கொண்டு துணிபப்படுந் துன்பவேற்றுமைகளையும் இம்மெனப் பின்னுரைப்பாம். வெளியிற்றோன்றும் எவ்வித வின்பதுன்பங்களும் அவ்வண்டப் பிரதிநிதியான சரீரத்தும் உண்டென்றோமல்லவா? இதை "அத்தியாத்மம்" என வடநூலார் வழங்குவார். இனி அவற்றிற்குப் பூமண்டலத்துள்ள பிரதிநிதிகளை "அதிபூதம்" என வழங்குவதுண்டு. மற்று ஆகாயவிரிவில் சஞ்சரிக்கும் அண்டங்களை "அதிச்சோதிடம்" என்பார்கள். இவற்றுள் சரீரத்துள்ள இன்பம் (சுவர்க்கம்) துன்பம் (நரகம்) இவைகளைப்பற்றிச் சிறிது எடுத்து விரித்தோம். மற்றது விரிவாய் யோகத்தைப்பற்றி எழுதுமிடங்காண்க. பின் பூமியிற் சுவர்க்கம் எங்கே நரகமெங்கேயென வினவில் அவ்விஷயத்திற் பூமியிலுள்ள சுவர்க்கத்தைப்பற்றி முன் "இதிகாசம்" என்னுந் தலைப்பின்கீழ் யாம் மாபாரதத்தை

[illegible]

ப்பற்றி எழுதுமிடம் எழுதினோம். இங்கு "பூமியில்" உள்ள நரகங்களைப்பற்றிச் சிறிது எழுதுவாம்.

ஐயா! பூமியை ஓர் விளாங்கனிபோல் வைத்து அதில் ஒரு ஊசியைச்செலுத்தி வெளிப்புறப்பட்டவளையில் எடுத்து ஏழுபாகமாகத்துண்டித்தால் அதில் நடுவில் நிற்கும் ஒருபாகம் அவ்விளாங்கனியின் மேற்புறத்திருந்து அதிக தூரத்துள்ளது. மற்றைய மேல் மூன்றுபாகங்களும் கீழ் மூன்றுபாகங்களும் சமான தூரத் தமைந்ததுமாகுமன்றோ? அம்மூன்றிலும் ஒன்றுக்கொன்று மேற்புறத்திலிருந்து சிறிதுசிறிது கிட்டத்திற்றானே கிடக்கும். ஆயின் இவற்றின் நடுப்பாகத்தைநடுநாயகமாக்கிஅங்கிரண்டுமுதல் மூன்றும்பாகங்கள் அளவில் முறையே மூன்று விருத்தஞ்செய்தால் முதற்பாகத்துள்ள விருத்தம் ஏழாம்பாகத்தையும், இரண்டாம்பாகத்துள்ள விருத்தம் ஆறாவது பாகத்தையும், மூன்றும் பாகத்துள்ள விருத்தம் ஐந்தாம்பாகத்தையுங் கலந்து ஊடுறவிச்செல்லும். இனி ஒவ்வொரு பிராணியும் எக்காலத்தும் எங்கும் நிற்கானதலால் அவ்வவன் நிற்குமிடமுதல் இவ்வேழு வேற்றுமையுள்ளதாகவே இப்பூமண்டலம் புலப்படும். ஆதலின் இதை ஒன்றாயாதல் நான்காயாதல் ஒன்பதாயதல் கூறலமையாது. ஆதலாற்றான் இங்குள்ளவைகளை அஃதோர் லோகங்கள் என்றும், "குகை" என்றும் பொதுவாய்க்கூறுதலொவ்வும். வேறு அண்டங்களாய நரகங்களை முன்னரே இலக்கணத்துடன் விரித்தோ

[illegible]

ம். இப்பூமியிலே அங்கு பாமபு முதலிய கொடிய ஜந்துக்கள் இருப்பதாய்க்கூறப்பட்டுளது. இனி இங்கு நாம் சொன்னவாறு முதல் மூன்று பாகமும பின் மூன்று பாகமும் ஒன்றுக்கொன் றிணையென்றும, [illegible]ன்காவது இணையற்றது என்றும் ..லவா முடிந்தது. அவ்விடயம் அ..ன் பெயர்களுக் கொத்துவருகின்..தா? என்பதை யாராய்வாம. ஆரியர் கீழ் உலகங்களுக்கு இட்ட பெயர்கள் அதல, விதல, ஸுதல, ரஸாதல, தலாதல, மஹாதல, பாதால என்பன. இவற்றைச் சோதிடங்கொண்ட கடபயாதி (க முதல் ஒன்பது எழுத்துக்கள் முறையே எனப்படும். 'ட' முதல் ஒன்பதும் அங்ஙனமே. 'ப' முதல் ஐந்து,'ய' முதல் எட்டு என்று வடமொழியெழுத்துக்களைக் கொண்டு எண்ணுதல கடபயாதி என்) எண்ணைக்கொண்டாதல் அக்ஷரஸமாம்னய எழுத்து முறையைக் கொண்டாதல் (இலக்கண நூலாசிரியரான பாணினிமகரிஷிக்குப் பரமபதியார் உபதேசித்த பதினுன்கு திருச்சூத்திரங்கள் வடநூலாசிரியர் வழக்கப்படி அக்ஷரசமாம்னயமெனப்படும். அவை ஒருவழியாய் எழுத்துக்களைப் போதிக்கின்றன. அவ்வழியும) கணக்கிட்டால் இந்த உண்மை வெளியாகின்றது. எங்ஙனமெனில் இவ்வெழுபெயர்களிலும் 'தல' என்னும் சொல்லிருக்கின்றது. கடைப்பாதாலத்தில் 'தால' என்பது 'தல' என்பதாகக் கொள்ளற்பாலது. ஆயின் 'தல' என்பது அளவிடக்கூடாத ஒருவிதத் துன்பத்தைக் குறிக்கும்

[illegible]

கைர்வாணீவிஜய:

[illegible]

சொல்லாய் வைத்துக்கொள்வாம் ஆயின் முதல் உலகம "அ+தல" ஆகின்றது. ஆனல் 'அ' என்பது ஒன்று ஆயின் ஒருபங்கு 'தல' உள்ளது முதல் உலகம். இது முதல். பாணினி சூத்திரத்தில் (அ-இ-உ-ண்) என்று கண்டபடி முறையறிக. இனி இரண்டாவது விதலவாக்கையால் 'இ' என்பதுஇரண்டாகையால் இரண்டுபங்கு தல 'விதல' என்று முடிந்தது. மூன்றுவது 'ஸுதல' உ மூன்றுயின் மூன்று பங்குள்ள 'தல' 'ஸுதல' என்று முடிந்தது. ரஸாதலத்தில் 'ர' என்பது ஒன்று 'ஸா' என்பது இரண்டு அகரம் கொண்டதாகையின் அவ்விரண்டு சேர்ந்தால் மூன்று. மறுபடி மூன்றுபங்கு 'தல' ரஸாதலவாயிற்று. தலாதலமும் அவ்விதமே. (3+தல) மகாதம்.

கைர்வாணீ விஜயம்.

இப்பெயர்பெற்ற ஒரு நாடகம் வடமொழியிலியற்றப்பட்டு விஞ்ஞானசிந்தாமணி என்னும பத்திரிகையுடனே எமக்குக்கிட்டியது. இதில் அக்கிரந்தத்தை எழுதின கவிஞன் பெயர் இஃதென விளங்காவிடினும் அவன் விசேடமாய் வடமொழியொன்றையேகற்றவனல்ல். மற்று அக்காவியத்தில் அவ்வடமொழிக்கு எதிர்மொழியாயமைக்கப்பட்ட ஆங்..

[illegible]

கிலேய பாடையிலும் அதிகப்பயிற்சியுள்ளவனாக இருத்தல்வேண்டும். அம்மட்டில் ஒழியாது அத்தேசவியல் அவ்விடத்திய ஆண் பெண்முதலியோர் நடையுடைகள் இவைகளும் அவர் ஆகாரம் முதலிய விஷ ஸ்தைகளும் இக்கவி அறிந்தவன். ஆகலாற்றான் அவ்விடயங்களை நன்கு அக்காவியத்தில் விசேடமாய் வர்ணித்துவருகிறான். இனி இவ்வுலகத்தில் எவன் ஓர் புதிய காவியத்தைச்சிருட்டிக்க உத்தேசிப்பானோ அவன் உலகத்திலுள்ள நன்னடவடிக்கைகளையும் மற்றவைகளையும் அறியவேண்டியது அவசியம். அவ்வித அறிவில்லாதொருவன் தனதியற்கையாற்றலைக்கொண்டு ஓர் காவியம் இயற்றின் அவன் நற்கவியெனப்பெயர் பெறுவது மிகக்கடினம். இனி இக்காவியத்தை நவீன கவிகள் சிறிது நோக்கின் நவீன கவிகளின் வழியாகாதென்பது அவர்களுக்குப் புலப்படும். இனி இவ்வித கவிகள் ஒருக்கால் நான்கைந்து பெயர்களிவ்விடமிருப்பார்களானால் நந்தேயத்தில் புதிய காவியங்கள் ஒழிந்திடாதென்பது திண்ணம். இவ்வித நற்புத்தகத்தை எமக்கனுப்பியதற்காக யாம் மிகவும அவர்க்குக் கடமைப்பட்டிருக்கிறோம்.

[illegible]

சங்கரங்கள்.

இதுவரையில் வேதங்களிற்சொல்லப்பட்ட வைதிக வருணமாகிய 'பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் ஆக நான்கு. வருணங்களைப்பற்றி ஒரு பெரிய உபந்நியாசம் எழுதிமுடித்தோமல்லவா? அங்கு வர்ணங்கள் அநாதியென்பனவும், அவை ஆதிகாலத்தில் குணகன்ம வேறுபாட்டால் உண்டாயினவென்பதும் அவை காலந்தோறும மாறுமென்பனவும எழுதப்பட்டனவல்லவா? இங்கு ஸங்கரங்களினுற்பத்தியையும் அவற்றின் காரணமும், அவர் முன் வருணத்தார்க்குச் செய்யவேண்டிய கடமையும், அவர் அவ்வருணங்களிலும் வேறானவரென்பதும், அவர்களை முன்னோர் ஆதரித்தவழியும் இப்பொழுது அவரை ஆதரிக்கவேண்டிய வழியும், அவரை யாதரித்தலாலேதான் கிறிஸ்துமதமுதலிய மதம் விருத்தியாயினவென்றும், அவர்க்குற்ற ஞானதிகாரத்தையும், அவர்களையும ஓர் விதச்சகாயமாய்க்கொண்டே முன்னோர் உலகத்தை நடாத்தினரென்பதும், இக்காலத்தவர் அவரிடஞ்செய்யும் சில அடிமைகளும் நமது மதத்திற்கு அதுவே ஒரு துர்ப்பல

[illegible]

மென்றும் விவரமாய் எடுத்து விரிக்கப்புகுவாம்.

1. இவற்றுள் முதல் விஷயம் இனி இவ்வுலகத்தில் இயற்கையாற்றானே மரங்கள் பலவிதமாவது போலும், பக்ஷிகள் பலவிதங்க[illegible] வதுபோலும், இம்மனிதர்கள் பலவேற்றுமைகளைப் பெற்றிருக்கிறார்கள். (அஃதெங்ஙனமெனில் ஒரே ஜாதியாய் (அதாவது ஒரேவித வமைப்புள்ளதாய்) இருக்கும் வீட்டில் பூனை, காட்டுப்பூனை, சிறுத்தைப்புலி, பெரும்புலிகளிலும், சிறுபல்லி, மரப்பல்லி, காட்டுப்பல்லி, நற்பல்லி, உடும்பு, கோமுதலை, முதலை முதலியவற்றிலும காலவேறுபாட்டாலும் இடவேறுபாட்டாலும் சிறிது சிறிது வித்தியாசத்தாற் பல ஜாதிகள் உண்டாம்.) இனி ஆதிகாலத்தில் ஜனங்கள் வாசஞ்செய்த பூமி இதுவேயென ஆரியாவர்த்தத்தைப் பலர் ரிச்சயித்திருத்தலால் அவ்விடத்தில் அவ்வவ்வினத்து மரங்கள் அவ்வவ்வினம்நன்றாகக்கூடிய பூமியில்விதையிடப்படுவது போல் அவ்வவ்வருணத்திய வாண்பெண்களுக்கு அவ்வவ் வருணத்திய வாண்பெண்களிட முண்டான வம்சங்கள் உண்மை வர்ணங்களாய் விதையினியல் மாறாது அத்தன்மையே பெற்றுவருகின்றன. மற்று

[illegible]

லகத்தில் கொடி செடிகளில் ஏதேனும வெவ்வேறு ஜாதிகளைக் கலந்திடுவோமானால்(அதாவது ஒன்றையொன்றுடன் சேர்க்கும் வழி சேர்த்தோமேயானால் அங்கு மூன்றாம் சாதியுண்டாவது இதுவும்பிறக்கும். உதாரணமாக, இரண்டு மாங்கன்றுகளைச் சேர்த்தால் அஃதிரண்டும் ஒரு ஜாதியாதலின் அது ஒரே செடியாய் அதன் முன்ஜாதியை விடாமல் முன்னிலும் அதிகமான குணத்துடன் விருத்திக்கின்றது. இனி வேறினத்தைச் சேர்த்தால் அது ஒருக்காலும் அங்ஙனமாகாது. இனி இடவேற்றுமையால் ஒவ்வொரு ஜாதிவிதைக்கும் இலைகளிலும் வளர்த்தியிலும் சிறிது வித்தியாசமிருப்பினும் உள்ள சாதியே மாறுவதில்லை.

மற்றது பின்வரும்.

சடிதம்.

கடவுள் ஒருவர் உண்டு.

மானுடப்பிறவியின் முக்கிய வுத்தேசமானது, இகபரசாதனங்களைப் பரியாலோசித்து அறிந்து அவற்றைக் குற்றமற அடைதலேயன்றி வேறல்ல. ஆயினும, ஊழ்வினையின் ஊக்கத்தாற் சிலர் (நாஸ்தி)

[illegible]

ர்) பரத்துக்குரிய ஆன்மா, அல்லது பரவஸ்துவொன்று கிடையாதென்று வாதிப்பதால், முதல் முதல் அதைக்குறித்து இங்கு இடத்துக்குத் தக்கவாறு சுருக்கி நியாயவ[illegible]லாக விவகரித்துக் கண்டித்து உண்மையை உறுதிப்படுத்துவாம்.

மேற்சொன்ன நாஸ்திகர்களிற் சிலர் இப்பிரபஞ்சத்துக்கு மூலகாரணம் (atom) பரமாணுக்கள் என்றும், அவ்வணுக்களன்றி வேறே சைதன்னியமுள்ள வஸ்துக்கள் கிடையாவென்றும் அல்லது காணப்படவில்லையென்றும் சொல்லுகின்றார்களன்றோ? இதில் முக்கியமாய் விசாரிக்கவேண்டியது, அப்பரமாணுக்கள் ஜடமா? சித்தா? என்பதே. ஜடம் என்பது உணர்ச்சி ஞாபகம் யோசனையாதி அறிவு லக்ஷணமில்லாதது எனவும், சித்து என்பது உணர்ச்சி ஞாபகம் யோசனையாதி அறிவு லக்ஷணமுள்ளது எனவும் பொருள்படும். எனவே மேற்சொன்ன பரமாணுக்கள் ஜடமென்பது அவர்கள் கொள்கையாகையால், இங்கு அவ்வணுக்களின் தத்துவத்தைப் பரியாலோசிப்பாம்.

இன்னும் வரும்.

ஓம்.

[illegible]

ப்ரம்மவித்தியா.

மாதம் இருமுறை
பிரசுரஞ்செய்யப்படும்.

புத்-5] சிதம்பரம்: 1890ஆ நவம்பர்மீ 15உ [இல 3

[illegible]

கடவுள் ஒருவர் உண்டு

தொடர்பு.

அநாதியாயிருக்கும் பரமாணுக்கள் ஓராதிகாலத்தில் ஒன்றோடொன்று கூடுவதற்குக் காரணமும் அதற்குமுன் கூடாமல் நின்றதற்குக் காரணமும் நாஸ்திக சிநேகிதர்களே காட்டவேண்டியதன்றோ. ஒன்றோடொன்று கூடிற்று என்றால் அஃது ஓர் காரியமாயிற்று. ஆகவே, காரியத்திற்குக்காரணம் வேண்டுவது ஆவசியகம். ஞாபக யோசனையாதி அறிவு லக்ஷணமில்லாத ஓர்ஜட வஸ்துவானது தானே காரியப்படமாட்டாது; அறிவுள்ள மற்றோர் வஸ்துவால் காரியப்படுத்தப்படவேண்டியதேயியல்பு.

பரமாணுக்களுக்கு ஒன்றோடொன்று கூடுஞ்சுபாவமுண்டாதலால் அவைஉணர்ச்சிஞாபகமாதி அறிவு லக்ஷணமில்லாத ஜடமாயிருப்பினும் ஒன்றோடொன்று கூடும் என்னில்,